கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**
திரு.ரத்தினசாமி (P.W. –1) **08.04.2026**

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.</u>**

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்ட கூடுதல் ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்யவேண்டும்.

1. நானும் என்னுடைய தகப்பனாரும் பிரின்ஸ் டையிங் நிறுவனம் நடத்தி வந்தோம். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு 15.02.2014 ம் தேதி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து தொழில் சம்மந்தமாக என் பெயரிலும் பிரின்ஸ் டையிங் பெயரிலும் வந்த கடிதம் தாக்கல் செய்தேன். அது வா.சா.ஆ– 38

2. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து 25.06.2013 ம் தேதி பிரின்ஸ் டையிங்க்கு அனுப்பட்ட கடிதம் – **வா.சா.ஆ– 39**

3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து 29.07.2016 ம் தேதி பிரின்ஸ் டையிங்க்கு அனுப்பட்ட கடிதம் – **வா.சா.ஆ– 40**

4. முருகம்பாளையம் பொது சுத்திகரிப்பு நிறுவனத்தில் இருந்து 11.11.2017 ம் தேதி 44,74,300/– தொகை பிரின்ஸ் டையிங் நிறுவனம் செலுத்தவேண்டும் என்று அனுப்பட்ட கடிதம் – **வா.சா.ஆ– 41**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.04.08 18:20:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.